**தலைப்பு 294 - தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம் - 2024**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தலைப்பு 294 – தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை**

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

## 2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,
(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் 50 (ii) பிரகாரம் வருடாந்த மதிப்பீடு முடியுமான வரையில் முழுமையாக மற்றும் சரியாக தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் 05 செலவீன விடயங்களுக்கான ஒதுக்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 17,600,000 ஆன நிகர நிதியேற்பாட்டில் கூட்டுத்தொகை ரூபா 12,462,394 பயன்படுத்தாமையினால் 52 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையான வீச்சில் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | இந்த ஆண்டினுள் வெளிநாட்டு பயணங்கள் இல்லாமை, நலன்புரி நிதியத்தின் வருமானத்தின் ஊடாக அனேக செயற்திட்டங்களுக்குரிய செலவீனங்களை பெற்றுக் கொள்ளல், POS Machine திசெம்பர் மாதம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டமையினால் மென்பொருள் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக நிதியேற்பாடு செலவிடப்படாமை மற்றும் பாதுகாப்பு செலவீனம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளுக்கான செலவீனம் நிதியத்தின் ஊடாக ஏற்கப்பட்டிருத்தமையினால் திணைக்களத்தின் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீடு தயாரிக்கும் போது அனைத்து விடயங்களும் கருத்திற் கொள்ளப்பட்டு நிதி பிரமாணம் 50 (ii) பிரகாரம் சரியாக தயாரித்தல் வேண்டும். |

## 3.2 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் தமது நிறுவகத்தின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தொடர்பான மீளாய்வு எழுத்து மூலமாக மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லலை. | உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தொடர்பான மீளாய்வினை இந்த ஆண்டு தொடக்கம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணங்காமை | | |
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசு தாபன விதிக் கோவையின் xxiv அதிகாரத்தின் 4.5 மற்றும் 4.6 பந்திகள் | 1,967,796 | மரணித்த 08 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 478,872 உம், வேலை இடை நிறுத்தப்பட்ட 13 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 617,458 உம், வேவையை விட்டுச் சென்ற 20 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 871,466 என மொத்தம் ரூபா 1,967,796 அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அதில் ரூபா 1,013,643 ஆன தொகை 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் நிலுவையாக | மரணித்த உத்தியோகத்தர்களின் கூட்டுத்தொகை ரூபா 83,679, இடைநிறுத்தப்பட்ட 09 உத்தியோகத்தர்களின் கூட்டுத்தொகை ரூபா 170,371 மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களின் ரூபா 119,915 ஆன கடன் மீதிகள் பதிவழிப்பதற்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.<br><br>இடை நிறுத்தப்பட்ட இரு ஊழியர்களின் புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையினால் கடன் மீதியான ரூபா 161,870 தொடர்ந்தும் தீர்க்கப்படாததுடன் மற்றைய 02 கடன் மீதிகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு | அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள் விரைவாக அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | காணப்படுகின்ற மீதியாகும். | மற்றும் தவணை ரீதியாக அறவிடப்படுவுள்ளது.<br><br>மற்றைய மீதிகள் பிணையாளிகளிடமிருந்து மற்றும் கடனாளிகளிடமிருந்து தவணை அடிப்படையில் அறவிடப்படுவதற்கும் அவ்வாறு அறவிடப்பட முடியாத மீதிகள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது. |

### 3.4 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் 571(2) பிரகாரம் காலாவதியான வைப்புகள் அரச வருமானத்திற்கு வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 923,094 தொகையான வைப்புகள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாது 03 வைப்பு கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இந்த தொகை அரச வருமானத்திற்கு வரவு வைக்கப்படல் வேண்டும். | நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 தொலைநோக்கு மற்றும் செயற்பணி

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்குச் சொந்தமான ஒரே ஒரு சபாரி பூங்காவனம் ஆரம்பிக்கப்பட்டு 09 வருடங்கள் அளவிலான காலம் கடந்திருந்த போதும், அந்த பூங்காவை செயற்படுத்துவதற்கு உரிய குறித்துரைத்த வழிகாட்டியொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சபாரி பூங்காவனம் செயற்படுத்தப்படுவதற்குரிய வழிக்காட்டி கோவை தயாரிப்பதற்கான அடிப்படை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதன் மேல் நடவடிக்கைகள் தொடர்பில் 02 தடவைகள் கலந்துரையாடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | குறித்த வழிக்காட்டி கோவை விரைவாக தயாரித்து அதன் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4.2 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் ரூபா 1,900,000 தொகையான நிதியேற்பாட்டின் கீழ் மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த கழிவு நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தினை (Waste Water Treatment Plant) நிறுவும் பணி செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | Waste Water Treatment Plant செயற்திட்டத்திற்கு தேவையான பொருட்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், அச் செயற்திட்டத்திற்கு தொடர்புடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | திட்டமிட்ட பணிகள் குறித்த காலத்தினுள் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4.3 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பின்னவல யானைகள் சரணாலயத்தில் ரூபா 2,000,000 தொகையான நிதியேற்பாட்டில் நாரம்பெத்த தொடக்கம் மாஓயா வரையில் படிகள் நிர்மணித்தல் (Construction of Narambadda Steps to Ma-Oya) மீளாய்வாண்டினுள் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதன் பௌதீக செயன்முன்னேற்றம் 10 சதவீதம் ஆக காணப்பட்டது. | நாரம்பெத்த யானைகள் சரணாலயத்தில் உள்ள யானைகள் மாஓயாவுக்கு இரங்கும் இடத்தில் கட்டிடமொன்று நிர்மாணித்தல் 2024 திருத்தப்பட்ட செயல்நடவடிக்கை திட்டத்திற்கு 2024 ஆகஸ்ட் மாதம் உள்ளடக்கப்பட்டுள்ளது. அப் பணி நிறைவேற்றலானலு கேகாலை மாவட்ட பொறியியலாளர் அலுவலகத்திற்கு பணிக்கப்பட்டுள்ளது. இந்த பணிக்கு தொடர்புடைய நீர்பாசனத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், ஓயாவின் மத்தியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மணல் கொண்ட தீவினை அகற்றி கரையின் அரிக்கப்பட்ட பகுதி மறுசீரமைப்பதற்கு நெகிழ்வான தடுப்பு சுவரினை நிர்மாணித்து அதன் பின்னர் படிகள் நிர்மாணித்தல் பொருத்தமானது என பரிந்துரைக்கப்பட்டு 2024.11.21 ஆந் திகதி தெரிவித்துள்ளனர்.<br><br>அவ்வாறே நாடு முழுதும் பொறியியல் சேவையில் | திட்டமிட்ட பணிகள் குறித்த காலத்தினுள் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நிலவிய தொழில்சார் நடவடிக்கைகள் காரணமாகவும் இந்த பணி 2024 ஆண்டினுள் மேற்கொள்வதற்கு முடியாது போனது. | |
| (ஆ) | ஹம்பந்தோட்டை சபாரி பூங்காவனத்தில், வதிவிட பிரதேசம் மற்றும் சுற்றுலா பிரதேசத்தினை வேறுபடுத்தி வேளியொன்று மற்றும் பாதுகாப்பு கூடாரமொன்று ஆண்டினுள் நிர்மாணித்து பூர்த்தி செய்வதற்கு ரூபா 3,600,000 ஆன நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதன் பௌதீக செயன் முன்னேற்றம் 40 சதவீதமாகும். | ஹம்பந்தோட்டை சபாரி பூங்காவனத்தில், வதிவிட பிரதேசம் மற்றும் சுற்றுலா பிரதேசத்தினை வேறுபடுத்தி வேளியொன்று மற்றும் பாதுகாப்பு கூடாரமொன்று நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கொங்கிரீட் தூண்கள் பெற்றுக் கொள்வதற்கு நாட்கள் செல்வதினால் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் தாமதமாகியது. தற்போது நிர்மாணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | திட்டமிட்ட பணிகள் குறித்த காலத்தினுள் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 500 ஏக்கர் அளவிலான பரப்பளவையுடைய ரிதியகம சபாரி பூங்காவில் 150 ஏக்கர் நில அளவு ஒன்று ஆரம்பத்திலிருந்து பூங்காவிற்காக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | சபாரி பூங்கா ஆரம்பத்தில் ஒரு வலயத் திட்டம் தயாரிக்கப்பட்டதுடன் வருடாந்தம் பெறப்படுகின்ற நிதியேற்பாட்டின் அடிப்படையில் மிருக வலயங்கள் ஒவ்வொன்றாக நிர்மாணிக்கப்பட்டன. எனினும் 2020-2022 காலப்பகுதியில் நாட்டினுள் நிலவிய பொருளாதார நிலைமையின் காரணத்தினால் இந்த நடவடிக்கைக்காக நிதியேற்பாடு கிடைக்கப்பெறாமையின் அடிப்படையில் அந் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் தாமதித்ததுடன், தற்போது அத் திட்டத்தின் பிரகாரம் வலயங்கள் ஒவ்வொன்றாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. | சொத்துக்கள் பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4.5 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 ஆம் ஆண்டில் தெஹிவளை மிருகக்காட்சிசாலை பார்வையிடுவதற்காக 1,023,091 பார்வையாளர்களும் பின்னவல யானைகள் சரணாலயத்தை பார்வையிடுவதற்காக 650,013 பார்வையாளர்களும் ஆக போதியளவான உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகளின் எண்ணிக்கை வருகை தந்திருக்கும் போதும் இலங்கையில் ஒரே ஒரு சபாரிப் பூங்காவனமான ரிதியகம சபாரி பூங்கா மற்றும் பின்னவலை யானைகள் சரணாலயத்தின் அருகிலுள்ள இலங்கையின் ஒரே ஒரு திறந்த வெளி மிருகக்காட்சி சாலைக்காக வருகை தருகின்ற சுற்றுலா பிரயாணிகளின் எண்ணிக்கை முறையே 209,500 மற்றும் 302,627 ஆக இருந்தது. போதியளவான மற்றும் பல்வேறு வகையான மிருகங்கள், கவர்ச்சிகரமான சூழல் மற்றும் உரிய விளம்பரப்படுத்தல் காணப்படாமை அதற்கான காரணமாக இருந்தது. | 2019 தொடக்கம் 2022 வரை நாட்டினுள் நிலவிய நெருக்கடியான நிலைமை மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டின் காரணமாக சபாரி பூங்காவிற்கு புதிய மிருகங்கள் இறக்குமதி செய்வதற்கு முடியாது போனதுடன் 2023 ஆண்டில் மிருகங்கள் பரிமாற்றம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதுடன் தேசிய ரீதியில் கருப்பு அன்னப்பறவைகள் மற்றும் செம்மறி ஆடுகள் 2024 ஆம் ஆண்டில் சபாரி பூங்காவிற்கு பெற்றுக் கொள்ளப்பட்டன. மேலும் வெளிநாட்டு மிருகங்கள் பரிமாற்றத்தின் கீழ் ரஷ்யா மற்றும் இந்தியா நாடுகளிலிருந்து மிருகங்கள் பெற்றுக்கொள்ளல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இம் மிருகங்களின் ஒரு பகுதி சபாரி பூங்காவிற்கு கைளயிக்கப்படவுள்ளது. இங்கு கவர்ச்சிக்கு தடையாகியுள்ள, இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ள வேங்கை மற்றும் சிறுத்தை வலயங்களின் நிர்மாணிப்பு – நிதியேற்பாடு பற்றாக்குறை மற்றும் புதிய செயற்திட்டங்கள் ஆரம்பித்தல் மட்டுப்படுத்தப்படல் அடிப்படையில் நிறைவு செய்வதற்கு இயலாதிருந்ததுடன், வேங்கை வலயத்தின் நிர்மாணிப்பு 2024 ஆம் ஆண்டு செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு | மிருகக்காட்சி சாலைக்கு தேவையான வகையில் மிருகங்கள் பெற்றுக் கொள்வதற்கும், பொருத்தமான சுற்றாடலொன்று உருவாக்குதல் ஊடாக சுற்றுலா கவர்சியை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உள்ளடக்கப்பட்டதுடன் சிறுத்தையின் வலயத்தின் நிர்மாணிப்பு 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | ரிதியகம சபாரிப் பூங்காவில் 2023 ஆம் ஆண்டின் யூன் 02 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட வங்காள புலியின் மரணப்பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் அந்த புலி விசமடைந்த உடலுடன் மரணத்திற்கு உட்பட்டிருந்ததுடன் சபாரிப் பூங்காவின் பாதுகாப்பில் இருக்கின்ற விலங்கினம் ஒன்று இயற்கை அல்லாத வகையில் மரணத்திற்கு முகங்கொடுத்தமை தொடர்பான விசாரணைகள் நடவடிக்கைகள் இதுவரை பூர்த்திசெய்யப்பட்டிருக்க வில்லை. | வங்காளப் புலியின் மரணம் தொடர்பாக 2023 ஆம் ஆண்டின் விசாரணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் அந்த விலங்கினத்தின் உடல் மாதிரிகள் தொடர்பாக இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கை இதுவரை கிடைக்காமையின் அடிப்படையில் பரிசோதனையின் இறுதி அறிக்கை தாமதமடைந்துள்ளது. | விசாரணை அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (ஆ) | தேசிய மிருகக்காட்சிசாலைத் திணைக்களத்தின் 2024 திசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 894 அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் 173 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அதில் சிரேஷ்ட நிலையில் 11 பதவிகளும், இரண்டாம் நிலையில் 37 பதவிகள் மற்றும் ஆரம்பநிலையில் 125 பதவிகளும் உள்ளடங்கி இருந்தது. | இந்த வெற்றிடங்கள் பூர்த்தி செய்து தருமாறு கோரி பொது நிர்வாக அமைச்சிற்கு 2024.02.07 – 2024.04.21, 2024.06.07 மற்றும் 2024.06.26 திகதிகளில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | அத்தியாவசிய பதவிகளில் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு நிறுவனம் வலுவாக நடத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வருமானம் ஈட்டும் திணைக்களமொன்றாக மிகவும் வினைத்திறனாக பேணிச் செல்வதற்கும் முகாமைத்துவ தீர்மானங்கள் எடுப்பதற்கும் சிரேஷ்ட மட்டத்தின் வெற்றிடங்கள் நிலவியமை பாதகமாக தாக்கமளிக்கும் எனவும், இரண்டாம் நிலையில் மற்றும் ஆரம்ப நிலையில் வெற்றிடங்கள் நிலவியமை செயற்பாட்டு நடவடிக்கைகளின் வினைத்திறன் மீது நேரடியாக தாக்கமளிக்கும் எனவும் அவதானிக்கப்படுகின்றது. | இந்த திணைக்களத்தில் நிலவுகின்ற வெற்றிடங்கள் தொடர்பில் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை அதிகரித்தல் தொடர்பாக கலந்துரையாடலொன்று பெற்றுக் கொடுக்குமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் 2024.06.07 ஆந் திகதி கோரப்பட்டுள்ளது. | அத்தியாவசிய பதவிகளில் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு நிறுவனம் வலுவாக நடத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |